# <u>காரமடை நகராட்சி</u>

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் நாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்</u>**

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

**<u>பொருள் : 01</u>**

காரமடை நகராட்சி ஆணையாளரது ஆகஸ்ட்-2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

**<u>பொருள் : 02</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கோவை மாவட்டத்திற்கு 24.08.2022 அன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை புரிந்ததையொட்டி, இந்நகராட்சி பகுதியிலிருந்து நலத்திட்டம் பெறும் பயனாளிகளுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்து வழங்குவதற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4288/2022/கை1, நாள்.23.08.2022-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கான செலவுத் தொகை ரூ.1,57,290/-ஐ திருவாளர்.பேமஸ் குக் நிறுவனம், கோவை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** பின்னேற்பு வழங்கலாம்.
(ந.எ.எண்.1937/2022/இ1)

**<u>பொருள் : 03</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11919/2022/CFC-1, நாள்.23.08.2022ல் 15வது நிதிக்குழு மான்ய திட்டம்– 2022–23 ஆம் ஆண்டுக்கு டைடு மற்றும் அன்டைடு மான்யங்களுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளுக்கு திட்டப்பிரேரணையை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காரமடை நகராட்சியில் மேற்கண்ட நிதியில் 15வது நிதிக்குழு வழிகாட்டுதல்களை பின்பற்றி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வகைப்பாடு (Sector) | TIED GRANT (ரூ.கோடியில்) | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | $15^{th}$ CFC Grant (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணி | 0.60 | காரமடை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு எல்.சி.வி. (LCV-3Nos) வாகனங்கள் கொள்முதல் செய்தல். | 24.00 | 22.00 | 2.00 |
| 2 | குடிநீர் பணி | | காரமடை நகராட்சி நீர் உந்து நிலையத்தில் மின்மோட்டார்கள் பொருத்துதல். | 38.00 | 38.00 | - |
| | | | **மொத்தம்** | **60.00** | **60.00** | **2.00** |

| வ. எண் | வகைப்பாடு (Sector) | UN-TIED GRANT (ரூ.கோடியில்) | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | $15^{th}$ CFC Grant (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கட்டுமானப் பணி | 0.40 | காரமடை நகராட்சி வளமீட்பு பூங்காவை சுற்றி பழுதடைந்த சுற்றுசுவரை இடித்து புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல். | 40.00 | 40.00 | - |
| | | | **மொத்தம்** | **40.00** | **40.00** | - |

**<u>அ.கு :</u> 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.2155/2022/இ1)**

**<u>பொருள் : 04</u>**

காரமடை நகராட்சியில் **21.07.2022ம்** தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | காரமடை நகராட்சியில் கோவை-மேட்டுப்பாளையம் சாலை ஆர்.வி.கல்லூரி முதல் சொசைட்டி காலனி வரை 4" C.I குழாய் சப்ளை செய்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல். | 5.60 | திருவாளர்.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் | **0.03%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.ஆர்.எ.குப்புசாமி | **3.12%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2)** குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
**(ந.எ.எண்.1859/2022/இ1)**

**<u>பொருள் : 05</u>**

காரமடை நகராட்சியில் **2021-2022**ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தெகுதி மேம்பாட்டு திட்டத்தில் **24.08.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | வார்டு எண் **27** ஆர்.வி.நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல். | **3.80** | திரு.ஆர்.எ.குப்புசாமி | **0.05%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் | **4.35%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஆர்.எ.குப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2)** குடிநீர் அவசர அவசியத்தை கருதி திட்ட பணி என்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
**(ந.எ.எண்.1802/2022/இ1)**

**<u>பொருள் : 06</u>**

காரமடை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு கடந்த **07.12.2021** முதல் செயல்பட்டு வருகிறது. இதில் தற்போது உள்ள நடைமுறைகள் அனைத்தும் நகராட்சியின் தரத்திற்கு ஏற்றவாறு தரம் உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே தற்போதுள்ள மின் அமைப்பு மற்றும் கணினி பயன்பாட்டிற்கு ஏற்ப பல்வேறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. மேலும் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் UTIS மென்பொருள் இயக்கம் முழுமையான அனைத்து இனங்களில் கொண்டு வரப்படவேண்டியுள்ளது. இதற்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டிய நிலையில் உள்ளது. மேலும் தற்போது சொத்துவரி சீராய்வு பணிகள் முடிக்கப்பட்டு அனைத்து வரி வசூல் பணிகளும் மேற்கொள்ளப்படவேண்டிய நிலை உள்ளது. இதற்கு தேவையான கணினி பயன்பாட்டிற்கு தடையில்லா மின் இணைப்புகள் மற்றும் இன்டர்நெட் வசதிகள் புதியதாக செய்யப்படவேண்டியுள்ளது. மேலும் அனைத்து பிரிவு பணிகளும் கணினி வழியாக மேற்கொள்ளப்பட தேவையான இன்டர்நெட் லிங்கிங் பணிகள், நெட் ஒர்க் பணிகள், 5KVA UPS இயந்திரம் மற்றும் **10** எண்கள் பேட்டரிகள் போன்றவை நிறுவி இப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.**6.60** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.2147/2022/இ1)

**<u>பொருள் : 07</u>**

காரமடை நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் சமச்சீரான குடிநீர் வராத காரணத்தால் அப்பகுதிகளுக்கு ஆழ்துளை கிணற்றின் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்றது. அப்பகுதிகளில் இயங்கி வரும் மின்மோட்டார் மற்றும் இதர உபகரணங்கள் பழுது நீக்க வேண்டியுள்ளது. அதற்காகும் செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2228/2022/இ1)

**<u>பொருள் : 08</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்கள், உப்பு தண்ணீர் குழாய்கள் ஆகியவற்றில் உள்ள பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்கள் மற்றும் Pumping குழாய்களில் ஏற்படும் பழுது காரணமாக குழாய்களில் கசிவு ஏற்படுகின்றது. மேலும் தற்பொழுது நெடுஞ்சாலை துறையின் மூலம் கோவை-மேட்டுப்பாளையம் பிரதான சாலை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற காரணத்தால் அவ்விடத்தில் உள்ள குழாய்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அதற்காகும் உள்ள அனைத்து பகுதிகளிலும் சமச்சீரான குடிநீர் வராத காரணத்தால் அப்பகுதிகளுக்கு ஆழ்துளை கிணற்றின் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்றது. அப்பகுதிகளில் இயங்கி வரும் மின்மோட்டார் மற்றும் இதர உபகரணங்கள் பழுது நீக்க வேண்டியுள்ளது. அதற்காகும் செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2229/2022/இ1)

**<u>பொருள் : 09</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 உள்ள சிவன்புரம் பகுதியில் சமச்சீரான முறையில் குடிநீர் வராத காரணத்தால் பொது மக்கள் நலன் கருதி அவ்விடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து குழாய் விஸ்தரிப்பு பணிகள் மற்றும் Sintex Tank அமைத்து பணிகள் மேற்கொண்டு பொது மக்களுக்கு உப்பு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2230/2022/இ1)

**<u>பொருள் : 10</u>**

காரமடை நகராட்சி பேரூராட்சியிலிருந்து கடந்த டிசம்பர் 2021ல் நகராட்சியாக தர உயர்த்தப்பட்டது. பேரூராட்சியாக செயல்பட்டபோது டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை களப்பணி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதல் உத்திரவு ந.க.எண்.2571/ஜெ1/2017, நாள்.14.02.2017ல் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறையை பின்பற்றி 300 வீட்டுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் பின்பற்றாது 10 நபர்கள் களப்பணியாட்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு

வழங்கப்பட்டு களப்பணியில் தொய்வு ஏற்பட்டு டெங்கு மற்றும் கோவிட் பாதிப்பு நகர் பகுதியில் அதிகமாக காணப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் வழிகாட்டுதல்களின்படி 300 வீட்டுக்கு ஒரு களப்பணியாளர் என்ற வீதத்தில் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 15878 (வரிவிதிப்பின்படி)க்கு 53 களப்பணியாட்கள் Outsourcing முறையில் தேர்வு செய்யவும் இதனால் 89 நாட்களுக்கு செலவினம் ரூ.28,58,502/- க்கு அனுமதி பெறவும், செலவுத் தொகையை பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> 1) அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.எ.எண்.1883/2022/எச்1)

<u>பொருள் : 11</u>

காரமடை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியில் மேலும் முன்னோக்கி செல்ல ஏதுவாக இயக்க நுண் உரக்குடில் (Micro Compost Center) அமைக்க மாநில உயர்மட்டக்குழு ஒன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி உரக்குடில் அமைக்க ஏற்கனவே குப்பைகள் நிறைந்துள்ள உரக்கிடங்கில் தென்புறம் அமைக்க அப்பகுதியில் கொட்டிக்கிடக்கும் குப்பைகளை செயின் டோசர் (Hitchi) மற்றும் டிப்பர் மூலம் ஒழுங்குபடுத்தி இடத்தினை சுத்தம் செய்து இயக்க நுண் உரக்குடில் (Micro Compost Center) கட்டுவதற்கு மேற்படி இடத்தினை சுத்தம் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> 1) அனுமதி வழங்கலாம்.
2) நகராட்சியில் இயக்க நுண் உரக்குடில் (Micro Compost Center) வேறு இடம் இல்லாததால் உரக்கிடங்கில் குறிப்பிட்ட பகுதியினை ஒழுங்குபடுத்தி பணியினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.எ.எண்.2329/2022/எச்1)

<u>பொருள் : 12</u>

காரமடை நகராட்சி பேரூராட்சியாக இருந்து தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மத்திய பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969ன்படி பிறப்பு இறப்பு பதிவேடுகளை பராமரிப்பு வழிகாட்டுதல்களின்படி பேரூராட்சியாக இருந்த காலத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் 1991 முதல் 2018 வரை 129 பதிவேடுகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை திரும்ப காரமடை நகராட்சிக்கு பெற்று வரப்பட்டது. மேற்படி பதிவேடுகள் கிழிந்த காணப்பட்டதால் பாதுகாப்பாக வைப்பதற்கு பைண்டிங் பணி செய்யவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | பைண்டிங் விபரம் | அறிவியல் கலை அச்சகம், காரமடை | ராஜேந்திரா ஆர்ட் பிரிண்டர்ஸ், காரமடை |
|---|---|---|---|
| 1 | கார்னர் பைண்டிங் | ரூ.160/- | ரூ.180/- |
| 2 | அட்டை பைண்டிங் | ரூ.95/- | ரூ.110/- |
| 3 | சார்ட் பைண்டிங் | ரூ.50/- | ரூ.60/- |

மேற்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.அறிவியல் கலை அச்சகம், காரமடை நிறுவனத்தாருக்கு அலுவலக நிர்வாக அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டு 129 பதிவேடுகள் பைண்டிங் பணி முடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.17352/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அலுவலக நிர்வாக அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.07/2022/எச்1)

**<u>பொருள் : 13</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி All India Campaign ஆன SBM-INDIAN SWACHHATA LEAGUE போட்டியில் காரமடை நகராட்சி பங்கு கொள்ளவும் Key-Activities-ன்படி விழிப்புணர்வு ஏற்படுத்தவதற்கும் தேவையான பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1.00 இலட்சம் இப்போட்டியில் பங்கு கொண்டதற்கு மத்திய அரசின் IEC Activity நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
2) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.2230/2022/இ1)

**<u>பொருள் : 14</u>**

காரமடை நகராட்சியில் பணிபுரிந்து வரும் அடிப்படை பணியாளர்களுக்கு அரசாணை (2டி) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.05.1999ன்படி 2022-2023ம் ஆண்டிற்கான சீருடை வழங்க கீழ்கண்ட பணியாளர்கள் தகுதி பெறுவதால் அவர்களுக்கு ஆண்டிற்கு 2 ஜோடி சீருடை வழங்க அரசு சார்பு நிறுவனமான கோஆப்டெக்ஸ், தமிழ்நாடு அரசு கைத்தறி நிறுவனம் அல்லது தமிழ்நாடு அரசு நூற்பாலை (என்டைஸ்) ஆகிய ஏதேனும் ஒரு நிறுவனத்தில் கொள்முதல் செய்து பணியாளர்களுக்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி கொள்முதல் செய்யவும், அதற்கான தையற்கூலி ஆண்களுக்கு ரூ.800/- பெண்களுக்கு ரூ.80/- வீதமும், 1 ஜோடி காலணிக்கான தொகை தலா ரூ.140/- வீதம் பணியாட்களுக்கு வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1) தூய்மைப் பணியாளர்கள் | - 37 (ஆண்-26, பெண்-11) |
| 2) ஓட்டுநர் | - 1 (ஆண்-1) |
| 3) துப்புரவு பணி மேற்பார்வையாளர் | - 1 (ஆண்-1) |
| 4) அலுவலக உதவியாளர் | - 2 (ஆண்-1, பெண்-1) |
| 5) குடிநீர் விநியோகப் பணியாளர்கள் | - 11 (ஆண்-11) |

**அ.கு:–** அரசின் கொள்கை முடிவின்படி அடிப்படை பணியாளர்களுக்கு வழங்கவேண்டியது மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2282/2022/எச்1)

**பொருள் : 15**

காரமடை நகராட்சியில் அலுவலக அனைத்து அறிக்கைகள் ஜெராக்ஸ் எடுப்பதற்கு ஜெராக்ஸ் இயந்திரம் விநியோக செய்ய 16.09.2022ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | திருவாளர்.சாய் பிரிண்டர்ஸ் அன்ட் காப்பியர்ஸ், கோவை | ரூ.99,500/- |
| 2 | திருவாளர்.டிரீம்ஸ் டெக், கோவை | ரூ.96,760/- |
| 3 | திருவாளர். சிக்மா பிஸ்னஸ் லிங்கஸ், கோவை | ரூ.1,02,500/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். டிரீம்ஸ் டெக், கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2087/2022/இ1)

**பொருள் : 16**

காரமடை நகராட்சியில் கணினி பிரிண்டர் டோனர் மை நிரப்பவும் மற்றும் அதில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 16.09.2022ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் பெயர் | யுனிடெக், வீரபாண்டி | ஜி.டெக் கோவை | ஐ ஜெட் கோவை |
|---|---|---|---|---|
| 1 | 12 a & 88 a Cattridge refill | ரூ.550/- each | ரூ.625/- each | ரூ.600/- each |
| 2 | 12 a drum | ரூ.300/- each | ரூ.325/- each | ரூ.350/- each |
| 3 | 88 a drum | ரூ.300/- each | ரூ.325/- each | ரூ.350/- each |
| 4 | 12 a compatable catridge | ரூ.1400/- each | ரூ.1600/- each | ரூ.1550/- each |
| 5 | 12 a & 88 a dr/w blade | ரூ.100/- each | ரூ.125/- each | ரூ.140/- each |
| 6 | Epson L565 Black ink | ரூ.400/- each | ரூ.425/- each | ரூ.410/- each |
| 7 | Epson L565 Colour ink | ரூ.420/- each | ரூ.450/- each | ரூ.425/- each |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.யுனி டெக், வீரபாண்டி பிரிவு, கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2087/2022/இ1)

**பொருள் : 17**

காரமடை நகராட்சியில் 15.09.2022ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| **1.** | காரமடை நகராட்சி தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கி வரும் 40HP மின்மோட்டார் பழுது ஏற்பட்டதை சரிசெய்தல். | **0.52** | திருவாளர்.ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் | ரூ.**43650/-** |
| | | | திருவாளர்.ஸ்ரீபவர் இன்ஜினியர்ஸ் | ரூ.**45000/-** |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1983/2022/பி1)

**<u>பொருள் : 18</u>**

காரமடை நகராட்சியில் **15.09.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| **1.** | காரமடை நகராட்சி அலுவலகத்தில் இன்டர்நெட் லிங்கிங், நெட் ஒர்க் பணிகள், 5KVA UPS இயந்திரம் மற்றும் 10 எண்கள் பேட்டரி சப்ளை செய்து பணி மேற்கொள்ளுதல். | **6.60** | திருவாளர்.சிஸ்கான் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | ரூ.5,39,512/- |
| | | | திருவாளர்.சாகர் எலக்ட்ரானிக்ஸ், பொள்ளாச்சி | ரூ.5,71,183/- |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** வரிவசூல் பணிகள் UTIS மென்பொருளில் கணினியில் மேற்கொள்ளவும், காணொளி ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள மேற்கொள்ளப்பட்ட பணிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2147/2022/இ1)

**<u>பொருள் : 19</u>**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் கீழ்காணும் விபரப்படி காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | மூன்றாண்டு சராசரி (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.12 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 55212 | 55212 | மாத வாடகை ரூ.4700/- வீதம் வருட வாடகை ரூ.56,400/- ஒப்பந்தப்புள்ளி (10ஆம் அழைப்பு) | திரு.எம்.ராஜன் | சென்ற வருட ஏலத் தொகையினை விட ரூ.1188/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

**அ.கு :-** மேற்கண்ட ஏல இனம் 10 அழைப்பு கோரப்பட்டதில் 9 அழைப்புகளில் ஏலம் கோர எவரும் வரவில்லை. 10ம் அழைப்பில் மேற்கண்ட கடைக்கு அதிகபட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 7ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்து அங்கீகரிக்கலாம்.
(ந.எ.எண்.559/2022/அ1)

**பொருள் : 20**

காரமடை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.8866/2018/உ4, நாள்.16.10.2018ன் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி வளமீட்பு பூங்காவில் பயோமைனிங் (Biomining) பணி செய்தல். | 44.76 |

மேற்படி பணிக்கு 10.05.2022 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

மேற்படி பணிக்கு நேரிடையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி உறைகளை கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் 10.05.2022ம் தேதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். எனவே அனைத்து ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் அன்றைய தினம் செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி வளமீட்பு பூங்காவில் பயோமைனிங் (Biomining) பணி செய்தல். | 44.76 | திருவாளர்.கிரீன் பைன் எக்யூப்மெண்ட்ஸ் | 4.87% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர்.ஸ்ரீபொம்மு இண்டஸ்ட்ரீஸ் | 5.36% மதிப்பீட்டிற்கு அதிகம் |

வரப்பெற்ற பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலைகுறைப்பு செய்து தர கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தங்களது கடிதத்தில் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர். மேற்படி பணி திட்டப்பணி என்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:– 1)** இப்பணி திட்டப் பணி என்பதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**2)** இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5% மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**3)** இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.822/2018/இ1)**

**<u>பொருள் : 21</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், அவற்றினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தேவையான பொருட்கள் வாங்கவும் ஆகும் செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.இ1/2334/2022)**

**<u>பொருள் : 22</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த தெருவிளக்குகளை சரிசெய்யவும் மேலும் அவற்றினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தேவையான உதிரிபாகங்கள் வாங்க ஆகும் செலவினத் தொகை ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.இ1/2335/2022)**

**<u>பொருள் : 23</u>**

காரமடை நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத் திட்டத்தில் 16.09.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | Supply, delivery, erection, testing, commissioning of turbine pump with 6500 LPM x 50m head at raw water pumping station. | 18.00 | ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் | **4.95%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஸ்ரீபவர் இன்ஜினியர்ஸ் | **5.11%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| **2.** | Supply, delivery, erection, testing, commissioning of 100 HP/75 KW and allied electrical works at raw water pumping station. | 12.50 | ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் | **4.97%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஸ்ரீபவர் இன்ஜினியர்ஸ் | **5.44%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளிலும் மதிப்பீட்டு தொகைக்கு அதிகமாக இருந்ததால் விலை குறைப்பு செய்து தர ஒப்பந்ததாரர்களிடையே பேச்சுவார்த்தை நடத்த கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி பேச்சுவார்த்தையில் மேற்படி அனைத்து ஒப்பந்ததாரர்களில் திருவாளர்.ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தாரால் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக இரண்டு பணிகளுக்கு விலை குறைப்பு செய்து மதிப்பீட்டிற்கு **4.90%** அதிகமாக செய்து தருவதற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் இரண்டு பணிகளுக்கு மதிப்பீட்டிற்கு **4.90%** அதிகமாக பணிகள் செய்ய திருவாளர்.ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அ.கு:– 1)** இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு **5%** மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**2)** இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால், அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்.1646/2022/இ1)**

**<u>பொருள் : 24</u>**

காரமடை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை, தனிநபர் கழிப்பிடம், சமுதாய கழிப்பிடம் பயன்படுத்துதல் போன்ற பொது மக்களின் எண்ணங்களை மாற்றி திடக்கழிவு தரம் பிரித்தல், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்தாது இருத்தல், வீட்டுக்கு வீடு தனிநபர் கழிப்பிடம் ஏற்படுத்துதல், கழிப்பிடம் இல்லாத இடங்களில் சமுதாயம் அல்லது பொது கழிப்பிடங்களை பயன்படுத்தும் வகையில் தூய்மை இந்தியா இயக்கம் **2.0** லிருந்து **5** பரப்புரையாளர்கள் மற்றும் **1** மேற்பார்வையாளர் ஜுன் **01** முதல் பணி செய்ய சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**19008/SBM(U)2.o/2022**, நாள்.**18.07.2022**ன்படி அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கான ஊதியம் வழங்க மத்திய மாநில அரசின் பங்கு தொகை ரூ.**7,32,204/-** நகராட்சி நிதிக்கு

வரப்பெற்றதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.681/2022/பி1, நாள்.12.05.2022ன்படி ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியல் பெற்று தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கு.

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1954/2022/எச்1)

**<u>பொருள் : 25</u>**

காரமடை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது சாலை துண்டிப்பு கட்டணம் வசூலிப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2, நாள்.21.09.2009ன்படி இனி வரும் காலங்களில் கீழ்காணும் சாலைத்துண்டிப்பு சீரமைப்பு கட்டணங்கள் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | சாலையின் நீளம் | கருங்கல் ஜல்லி சாலை / மண்சாலை (ரூ) | தார்சாலை (ரூ) | சிமெண்ட் சாலை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 0-30 மீட்டர் நீளத்திற்கு | 1050 | 2250 | 2600 |
| 2 | 30-90 மீட்டர் நீளத்திற்கு | 1650 | 2850 | 3200 |

**அ.கு:–** அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2351/2022/பி1)

**<u>பொருள் : 26</u>**

திருமதி.வி.உஷா வெங்கடேஷ், நகர்மன்றத் தலைவர் அவர்களின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சஞ்சய் காந்தி நகர் ருக்மணி வீடு முதல் மகேஷ் வீடு வரை வடிகால் கட்டுதல்.

**<u>பொருள் : 27</u>**

திருமதி.ரா.பிரியா, 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சேரன் நகர்-2 பகுதியில் வடிகால் வசதி செய்தல்.
2) சேரன் நகர் -2 பகுதியில் உள்ள மண்சாலைகளை தார்சாலையாக மாற்றுதல்.
3) மடோனா ஹாஸ்டல் அருகில் உள்ள தார்சாலை பழுதடைந்துள்ளதை சீரமைத்தல் மற்றும் சேரன் நகர் -2 பகுதி முழுவதும் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல்.
4) சேரன் நகர் -2 பகுதியில் 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட 3 சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தருதல்.
5) சேரன் நகர் -2 பகுதியில் உப்பு தண்ணீர் இல்லாத பகுதிகளில் உப்பு தண்ணீர் குழாய் அமைத்தல்.
6) சேரன் நகர் -2 பகுதி முழுவதும் 15 புதிய மின் விளக்குகள் பொருத்துதல்.

**<u>பொருள் : 28</u>**

திரு.எம்.ரங்கசாமி, 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சிவன்புரம் காலனி கொங்கு மண்டபம் பின்புறம் மருதம் வீதி முதல் லீலா டீச்சர் வீடு வரை தார்சாலை அமைத்தல்.
2) மெட்ரோ பள்ளி எதிரில் தண்டாபணி வீடு முதல் தங்கவேல் வீடு வரை தார்சாலை அமைத்தல்.

3) சபரி கார்டன், குறிஞ்சி நகர், ஸ்ரீலட்சுமி நகர், கே.பி.எஸ்.அவென்யூ, லட்சுமி கார்டன், சுமதி நகர் மற்றும் அஜந்தாகார்டன் பகுதிகளில் தார்சாலை அமைத்தல்.

**<u>பொருள் : 29</u>**

திருமதி.ஆர்.நித்யா, 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) கலைஞர் நகர் பகுதியில் சமுதாய கூடம் கட்டுதல்.
2) எத்தப்பன் நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல்.
3) மங்கலக்கரைப்புதூர் பட்டத்தரசியம்மன் கோவில் முன்பு டிராபிக் கன்வெக்ஸ் கண்ணாடி பொருத்துதல்.

**<u>பொருள் : 30</u>**

திருமதி.வெ.மலர்கொடி, 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) ஈசா கார்டன் பகுதியில் தார்சாலை வசதி, வடிகால் வசதி செய்தல்.
2) அம்பேத்கர் நகர் பகுதியில் தார்சாலை வசதி, வடிகால் வசதி செய்தல்.

**<u>பொருள் : 31</u>**

திருமதி.சு.சாந்தி, 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சிவா நகர் செல்வராஜ் - சரசு வீடு முதல் கே.ஆர்.நகர் நூரிபீபி வீடு வரை தார்சாலை அமைத்தல்.
2) சிறுமுகை ரோடு கமலவேணி வீடு முதல் சைக்கிள் கடை வரை வடிகால் மற்றும் சாலை வசதி ஏற்படுத்துதல்.

**<u>பொருள் : 32</u>**

திருமதி.ஆர்.மஞ்சுளா தேவி, 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) அட்டியண்ண கவுடர் சந்தில் வடிகால் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல்.
2) அருணாச்சல முதலியார் சந்து பகுதியில் வடிகால் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல்.
3) பொங்காளி முதலியார் சந்தில் வடிகால் கவர் சிலேப் அமைத்தல்.

**<u>பொருள் : 33</u>**

திருமதி.எம்.எஸ்.செண்பகம், 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) வடக்கு ரத வீதி இந்தியன் வங்கியில் இருந்து பொன்மொழி அக்கா வீடு வரை கான்கிரீட் தளம் அமைத்தல்.
2) வடக்கு ரத வீதி ரங்கராஜ் மருத்துவமனை முதல் சுரேஷ் வீடு வரை வடிகால் அமைத்தல்.
3) ஜெரினாக்கா வீடு முதல் கரிக்கடை சந்து வரை வடிகால் அமைத்தல்.

**<u>பொருள் : 34</u>**

திருமதி. எஸ்.அனிதா, 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) குந்தா காலனி, டி.ஆர்.எஸ்.பேலஸ், மகாலட்சுமி நகர் பகுதிகளில் தெருவிளக்கு, வடிகால் மற்றும் தார்சாலை வசதி செய்தல்.

**<u>பொருள் : 35</u>**

திருமதி.எஸ்.சித்ரா எபினேசர், 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) அண்ணாமலை முதலியார் வீதியில் தார்சாலை மற்றும் வடிகால் செய்தல்.
2) குறிஞ்சி நகர் பகுதியில் தார்சாலை மற்றும் வடிகால் செய்தல்.
3) கே.ஆர்.காலனியில் உள்ள சாக்கடை குழியினை சரிசெய்தல்.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**<u>30.09.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற  சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்</u>**

**<u>பொருள் எண்.01</u>**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.02 முதல் 25 முடிய</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26 முதல் 35 முடிய</u>**

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்